# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

8069868

C

1. District : மாவட்டம் : திருநெல்வேலி — PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு — Year ஆண்டு : 2021 — FIR No. மு.த.அ. எண் : 01/2021 — Date நாள் : 08.01.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w
   (ii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 08.01.2021 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.00 hrs to — Time to : நேரம் வரை 19.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.01.2021 — Time : நேரம் 10.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral ; தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Sub Registrar office, Mukkudal, 35 Km West.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் — R.ராதாகிருஷ்ணன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.ராஜகோபால்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 02.06.1970 — (d) Nationality : நாட்டினம் — இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — தனி வட்டாட்சியர், (நில எடுப்பு) — (g) Address : முகவரி — தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் II, திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி.C.கலா, சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், முக்கூடல். 2).திரு.M.பாவா கான், இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், முக்கூடல், 3) திரு.பால்ராஜ், அலுவலக உதவியாளர், தனி நபர்கள் 4) திரு.சுப்பையா, த/பெ திரு.சாமிநாதன், 48/87, தெற்கு ரத வீதி, வீரவநல்லூர். 5) திரு.சுப்பையா, த/பெ திரு.வீரபுத்திரன், 4/122, மெயின் ரோடு, வடக்கு அரியநாயகிபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:

பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 08.01.2021ம் தேதி சுமார் 10.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் - II தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) திரு.R.ராதாகிருஷ்ணன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 08.01.2021-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் R.ராதாகிருஷ்ணன், தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்-II, திருநெல்வேலி. பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, பொருள்: முக்கூடல் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக 08.01.2021-ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணிபாசரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant

குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 9/1/21

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 9.01.21 at 13.30 h.

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E. MCCLARINE ESKHOL

Rank: நிலை DSP No. எண் V&AC Tirunelveli

மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மெக்லரின் எஸ்கால் அவர்களுடன் இணைந்து காவல் ஆய்வாளர் திருமதி.J.அனிதா, பெண் காவலர் திருமதி.பிரவீனா மற்றும் போலீசார் உதவியுடன் மேற்படி முக்கூடல் சார் பதிவாளர் அலுவலகத்தை இரவு 19.15 மணி முதல் 23.45 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த சார் பதிவாளர் திருமதி.C.கலா என்பவரிடமிருந்து ரூ.45,700/-ம், இள நிலை உதவியாளர் திரு.பாவா கான் என்பவரிடமிருந்து ரூ.6,940/-ம், டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் திருமதி.பத்மா என்பவரிடமிருந்து ரூ.2,500/-ம், தற்காலிக ஊழியர் திரு.சுப்பையா என்பவரிடமிருந்து ரூ.690/-ம், திரு.சுப்பையா என்பவரிடமிருந்து ரூ.1,710/-ம் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.பால்ராஜிடமிருந்து ரூ.420/-ம் ஆக மொத்த பணமான ரூ.57,960/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை நேற்று (08.01.2021) இரவு 19.15 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த திருமதி.C.கலா மற்றும் இளநிலை உதவியாளர் திரு.பாவாகான், அலுவலக உதவியாளர் திரு.பால்ராஜ் மற்றும் தனி நபர்களான தற்காலிக ஊழியர் திரு.V.சுப்பையா, திரு.S.சுப்பையா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒம்.இராதாகிருஷ்ணன், 09.01.2021), தனி வட்டாட்சியர், நில எடுப்பு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்-II, திருநெல்வேலி. 08.01.2021ம் தேதி முக்கூடல் கீழ பெரிய தெருவில் குமாரவேல் தெரு பிரிந்து செல்லும் இடத்தில் அமைந்துள்ள சார்பதிவக அலுவலகத்தை திருநெல்வேலி, நில எடுப்பு சிறப்பு தாசில்தார் திரு.R.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : திரு.R.ராதாகிருஷ்ணன், சிறப்பு தாசில்தார், (நில எடுப்பு), திருநெல்வேலி. 2).திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 08.01.2021ம் தேதி மாலை 17.00 மணிக்கு முக்கூடல் சார்பதிவக சார் பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி நில எடுப்பு தாசில்தார்

திரு.R.இராதாகிருஷ்ணன் அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.J.அனிதா பெண் காவலர் திருமதி.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 17.30 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489, TN 22 G 0471-ல் புறப்பட்டு சேரன்மகாதேவி, அரியநாகிபுரம் வழியாக வந்து சுமார் 19.15 மணிக்கு முக்கூடல் கீழ பெரிய தெருவில் இருந்து குமாரவேல் தெரு பிரிந்து செல்லும் இடத்தில் தெற்கு பார்த்து அமைந்துள்ள முக்கூடல் சார்பதிவக அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக வந்ததும், வெளியே கிளம்ப தயாராகிக்கொண்டிருந்தவர்களை அவரவர் இருக்கையில் அமர செய்து சோதனையிடப்பட்டது. சார் பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் ஹாலின் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த பின்னால் பெயர் தெரிந்து கொண்ட இளநிலை உதவியாளர் திரு.பாவா கான் என்பவரை சோதனை செய்தபோது அவர் தனது சட்டைப்பையில் இருந்து ரூ.300/-ஐ எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்தப்பணம் என்றார். மேற்படி பணம் சரிபார்க்கப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது பர்ஸ் குறித்து கேட்டபோது, அவர் தன்னிடம் பர்ஸ் ஏதும் இல்லை என்று கூறவே, அவர் முன்பு இருந்த மேஜை டிராயரில் சோதனை செய்தபோது அதில் கறுப்பு நிற பர்ஸ் இருந்தது. அதுகுறித்து இளநிலை உதவியாளரிடம் கேட்டபோது தன்னுடைய பர்ஸ்தான் என்று சொன்னார். அதனை சோதனை செய்தபோது அதிலிருந்த கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது ரூ.4,040/- (500X8=4,000, 20X2=40)ம், அவரது அலுவலக அடையாள அட்டையும், ஓட்டுனர் உரிமத்தின் நகலும் இருந்தது. அதில் மேற்படி பணத்தை குறித்து அவரிடம் கேட்டபோது அவர் மேற்படி பணம் வில்லங்க சான்று பார்த்த நபர்களும், பிறப்பு இறப்பு சான்று தன்னிடம் பெற்ற நபர்கள் தந்த பணம் என்று கூறினார். யார் யார் எவ்வளவு பணம் தந்தார்கள் என்று ஞாபகம் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.4,040/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.பாவாகான் அமர்ந்திருந்த மேஜைக்கு அடியில் கத்தையாக கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தில் ரூ.2,900/- (500X5=2,500, 200X1=200, 100X2=200) இருந்தது. மேற்படி பணத்தை குறித்து கேட்டபோது வில்லங்க சான்று பார்த்த நபர்களும், பிறப்பு இறப்பு சான்று தன்னிடம் பெற்ற நபர்கள் தந்த பணம் என்று கூறினார். யார் யார் எவ்வளவு பணம் தந்தார்கள் என்று ஞாபகம் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.2,900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கறுப்பு நிற பர்சும், அடையாள அட்டை மற்றும் ஓட்டுனர் உரிம

நகல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி இளநிலை உதவியாளரின் வடக்கு பக்கத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் திருமதி.S.பத்மா என்பவரிடம் இருந்த பணத்தை ஆஜர் செய்ய சொன்னபோது அவர் தன்னிடம் செலவுக்காக ரூ.500/- வைத்திருப்பதாக சொல்லி ஆஜர் செய்தார். அவரது கைப்பையை பெண் காவல் ஆய்வாளர் உதவியுடன் சோதனை செய்தபோது அதில் இருந்த செல்போனின் கவருக்குள் கத்தையாக பணம் இருந்ததை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.2,000/- இருந்தது. ஆக மொத்தம் ரூ.2,500/- (500X5=2,500) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் விசாரணைக்காக ரூ.2,500/- கைப்பற்றப்பட்டது. டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் திருமதி.S.பத்மாவின் இருக்கைக்கு வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட சார் பதிவாளர் திருமதி.C.கலா என்பவரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் இருந்து ரூ.200/- மட்டும் ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அது சரிபார்த்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது கைப்பையை பெண் காவல் ஆய்வாளர் உதவியுடன் சோதனை செய்தபோது, மேற்படி கைப்பையில் 'ROSHAN' என்று பொறிக்கப்பட்டுள்ளதில் மூன்று அறைகொண்டதாக இருந்ததை சோதனை செய்தபோது, அதின் நடு அறையில் மஞ்சள் கலர் அட்டையில் குறிப்புகள் எழுதப்பட்டிருந்ததில் ரூ.38,500க்கு கணக்குகள் எழுதியிருந்தது. அதனுடன் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.38,500/- (500X77=38,500) இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளர் திருமதி.கலாவிடம் கேட்டபோது, பத்திர எழுத்தர் திரு.கணேசன் அவர் பதிவு செய்த 17 பத்திரங்கள் வகைக்காக கணக்குகள் தன் கைப்பட மஞ்சள் அட்டையில் எழுதி மேற்படி பணத்துடன் கொடுத்ததாக தெரிவித்தன்பேரில் மேற்படி பணம் ரூ.38,500/- கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த கைப்பையில் மற்றொரு அறையில் இருந்த பைபிளை எடுத்து சோதனை செய்தபோது, அதில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது ரூ.7,200/- (500X14=7,000, 100X1=100, 50X2=100) இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளர் திருமதி.கலாவிடம் கேட்டபோது, மேற்படி பணம் பத்திரம் பதிவு செய்த வகைக்கு பத்திர எழுத்தர் திரு.கதிரேசனும், திரு.இம்மானுவேலும் கொடுத்ததாகவும், யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என நான் கணக்கு பார்க்கவில்லை என கூறினார். மேற்படி பணம் ரூ.7,200/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கறுப்பு நிற கைப்பையை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மெயின் ஹாலில் நின்று கொண்டிருந்த

பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அலுவலக உதவியாளர் திரு.பால்ராஜு சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் ரூ.620/- (100X4=400, 50X4=200, 10X2=20) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.பால்ராஜிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக பத்திரம் பதிவு செய்ய வந்தவர்கள் ரூ.10, 20 என தந்ததாகவும், ரூ.200/- மட்டும் தனது சொந்தபணம் என்று சொன்னார். ரூ.200/-சரிபார்க்கப்பட்டு அலுவலக உதவியாளர் திரு.பால்ராஜிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதி பணம் 420/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார் பதிவாளர் ஆஜர் செய்த தனிநபர் பணம் கையிருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மெயின் ஹாலின் சார் பதிவாளரின் இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சுப்பையா, த/பெ திரு.சாமிநாதன் என்பவரை விசாரித்தபோது, தான் பத்திர எழுத்தர் திரு.கணேசன் என்பவரிடம் வேலை பார்த்து வருவதாக தெரிவித்தார். திரு.கணேசன் அவர்கள் தன்னை அலுவலகத்தில் இருந்து பத்திரங்களை வாபஸ் பெற்று வர சொன்னதாக தெரிவித்தார். திரு.சுப்பையாவை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் ரூ.1,710/- (500X2=1,000, 200X3=600, 100X1=100, 10X1=10) இருந்ததை குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாதால் மேற்படி பணம் ரூ.1,710/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மெயின் ஹாலில் நின்று கொண்டிருந்த தனி நபர் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சுப்பையா, த/பெ திரு.வீரபுத்திரன் என்பவரை விசாரித்தபோது அவர் தான் அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் ஏதாவது வேலை சொன்னால் செய்து கொடுப்பதாக தெரிவித்தார், தன்னை தினக்கூலியாக சார் பதிவாளர் வைத்திருப்பதாகவும், நாள் ஒன்றுக்கு தனக்கு சார் பதிவாளர் ரூ.500/- சம்பளம் தருவதாகவும் கூறினார். எதிரு.சுப்பையாவை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் ரூ.690/- (500X1=500, 100X1=100, 50X1=50, 10X4=40) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.சுப்பையாவிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினால் மேற்படி பணம் ரூ.690/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மெயின் ஹாலின் வடக்கு பக்கத்தில் உள்ள பத்திரம் வைப்பறை காணப்பட்டது. சார் பதிவாளரின் இருக்கைக்கு கீழ்புறம் உள்ள வாசல் வழியாக உள்ளே வந்து சிறிய ஹால் உள்ளது. அதில் தென்புறத்தில் இன்வெர்ட்டர் பேட்டரி காணப்பட்டது. மேற்படி சிறிய ஹாலின் வடக்கு பக்கத்தில் ஆவணங்கள் வைப்பறைக்கு செல்லும் வழி உள்ளது. சிறிய ஹாலின் கீழ்புறத்தில் வடக்கு பக்கத்தில் உள்ள அறையில் உணவறை மற்றும் அதில் ஜெராக்ஸ் மிஷின் உள்ளது. மேற்படி அறையின் தெற்கு பக்கத்தில் கணினி அறை உள்ளது. மேற்படி கணினி அறையில் எல்காட் கேமரா ஆபரேட்டர் திரு.பேச்சிமுத்து இருந்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.640/- அவரது

பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்தார். மேற்படி பணத்தை குறித்து அவரிடம் கேட்டபோது அவரது சொந்த பணம் என்றும், வீட்டில் இருந்து வந்தபோதே கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் சரிபார்க்கப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார் பதிவாளர் திருமதி.கலாவிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் வசூல் செய்த பணத்தை பற்றி கேட்டபோது அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, D, Sub Division, Section 41, CD fees, Hindu Marriage, Special Marriage Notice, Birth and Death ஆகிய தலைப்புகளில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படி A தலைப்புகளில் ரூ.1,91,418/-ம், D-தலைப்புகளில் ரூ.2,811/-ம், Sub Division-ல் 8,400/-ம் Section 41-ல் ரூ.38,296/-ம் CD கட்டணம் ரூ.2,600/-ம் Hindu Marriage-ல் ரூ.155/-ம் Special Marriage Notice-ல் ரூ.3/-ம், Birth and Death-ல் ரூ.800/-ம் ஆக மொத்தம் ரூ.2,44,483/- ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பணமாக எந்த கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (13 தாள்கள்) கணினியில் எடுத்து வைத்திருந்ததையும், ஆன்லைனில் பணம் செலுத்தியதற்கான ஒப்புகை சீட்டுகளும் (32 தாள்கள்) ஆஜர் செய்தார். மேற்படி இரண்டு ஆவணங்களையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (08.01.2021) இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். R.இராதாகிருஷ்ணன், சிறப்பு தாசில்தார், ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 09.01.2021 at 10.30hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.01/2021 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 09.01.2021 at 11.00 hrs Sd.E.Mcclarine Eskhol, DSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Special Tahsildar (Land Acquisation), Tamilnadu Road Sector Project-II, Tirunelveli and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

9/1/21

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
16/53A/1, Masilamani Nagar
Tirunelveli - 5